2006 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (22-8-2006) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், மற்றும் ஏனைய தாள்கள்

72. மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007. (தமிழ், ஆங்கிலம்)

73. மானியக் கோரிக்கை எண் 21 - நெடுஞ்சாலைகள் துறை பற்றிய நிதிநிலைச் செயலாக்கச் சாதனைகள், 2005-2006. (தமிழ், ஆங்கிலம்)

74. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 25 வரை)

— — —